DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.1/2023 | Deposition of Witness for : PW1 |
| Name : ரத்தினராஜ் | Father/Husband Name : கணேசன் |
| Age : 35 | Village : அடைக்கலாபுரம் |
| Taluk : திருச்செந்துூர் | Calling : மளிகை கடை வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27 June 2025
Accused absent. Petition U/s.317 Cr.Pc filed and allowed.

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

1. என்னுடைய பெயரில் எதிரியினுடைய தந்தையை கடத்தி சென்றதற்காக திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூர் காவல்நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை குற்ற எண் 399/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்கூறிய கடத்தல் வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக நான் பொய்யாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2. என்னிடம் காட்டப்படும் தினத்தந்தி செய்தித்தாளில் எதிரியினுடைய தந்தையை கடத்த முயற்சித்ததாக திருப்பூர் மாவட்ட தினத்தந்தி செய்தித்தாளில் 25.09.2022 அன்று செய்தி வெளிவந்துள்ளது என்றால் சரியல்ல. அந்த செய்தியில் வந்துள்ள பெயர் என்னுடைய பெயர், ஆனால் அந்த செய்தி குறித்து எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் சான்றிட்ட முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் போலீசார் என்னை கைது செய்தார்களா என்றால் போலீசார் என்னை விசாரணைக்கு அழைத்துச்சென்று பின் திருப்பி அனுப்பிவிட்டார்கள். நான் இதை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய உறவினரான காவல் ஆய்வாளர் திரு.அன்பழகன், மேகலா, கார்த்திகேயன் ஆகியோரை வைத்து எதிரியினுடைய தந்தையை கடத்த முயன்ற வழக்கு இன்றுவரை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் மேற்கூறிய நபர்களை எனக்கு தெரியாது, எனக்கும் அந்த வழக்கிற்கும் சம்பந்தம் கிடையாது. நான் இதை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. இவ்வழக்கின் எதிரி காசோலை தொகையாக 14 லட்சத்தை யாருடன் வந்து வாங்க வந்தார்கள் என்றால் எதிரி மட்டும் வந்தார். (சாட்சி முதலில் கணபதி என்பவருடன் சேர்ந்து எதிரி கடன் வாங்க வந்தார் என்று கூறி பின் எதிரி மட்டும் வாங்க வந்தார் என்று கூறினார்).

4. மேற்கூறிய முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் திருப்பூர் மாவட்டம், அவினாசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில CC 53/2023 என்ற வழக்கில் நான் முறையாக ஆஜராகி வருகிறேன் என்றால் சரிதான். நான் உட்பட முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு நபர்களும் முறையாக ஆஜராகி வருகிறோம் என்றால் சரிதான்.

5. நான் கூறுவது போன்று எதிரிக்கு பணம் கொடுத்தாக நான் குறிப்பிட்டுள்ள என்னுடைய முகவரியோ, ஊரோ எதிரிக்கு தெரியாது என்றால் சரியல்ல. என்னுடைய ஊரான அடைக்கலாபுரம் எந்த காவல்நிலையத்திற்கு உட்பட்டது என்ற விபரம் எனக்கு

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.06.27 17:50:10 +0530

தெரியுமா என்றால் தெரியும், மெஞ்ஞானபுரம் காவல்நிலையத்திற்கு உட்பட்டது. நான் என்னுடைய ஊருக்கு முறையாக வராததால் தான் எனக்கு சரியாக என்னுடைய ஊர் தட்டார்மடம் காவல்நிலையத்திற்கு உட்பட்டது என்ற விபரம் தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில் எதிரிக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும், பணம் கொடுக்கும் அளவுக்கு போதிய வருமானத்துக்கு உரிய நபர் நான் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரியை பற்றி எந்த விபரமும் தெரியாததால் தான் நான் என்னுடைய வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பி அறிவிப்பில் எதிரியினுடைய வயது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. நான் ம.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளபடி எதிரி புதிய தொழில் தொடங்கப்போவதாக குறிப்பிட்டுள்ள தொழிலின் விபரம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் எதிரி பனியன் கம்பெனி தொடங்குவதற்காக வங்கியில் கடன் பெற விண்ணப்பித்திருப்பதாகவும், அந்த கடன் தொகை வந்தவுடன் எனக்கு திருப்பி தந்துவிடுவதாகவும் கூறி பணம் பெற்று சென்றார். இதை வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் மேற்கூறிய விபரங்கள் உண்மையென்றால் நான் என்னுடைய புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ நான் குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரியல்ல.

7. எதிரி என்னிடம் கடன் பெற்றபோது என்ன வேலை செய்து வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் காலையில் கல்லூரிக்கு சென்றுவிட்டு வந்து மாலையில் டாஸ்மாக் பார் நடத்தி வந்தார். நான் இதை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை CC 53/2023 என்ற வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக நான் பொய்யாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. எந்தவிதமாக பணமும் எதிரி வாங்கவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.06.27 17:50:28 +0530

Judicial Magistrate, Sathankulam.